[1981] மார்ச் 3

வினா எண் 349—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

யானைக்கால் ஒழிப்பு முழுமையாக செயல்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின்கீழ் 19 நோய் கட்டுப்பாடு பிரிவுகளும், 33 சிகிச்சை பிரிவுகளும் இந்நோய் பரவியுள்ள மற்றும் பரவ வாய்ப்புற்ற பகுதிகளில் தொடங்கப்பெற்று அவைகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர மூன்றில் ஒரு பங்கு மான்யத்துடன் 164 உள்ளாட்சிகள் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் நோய் எந்தெந்தப் பகுதிகளில் அதிகமாகப் பரவி வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்? என். எம். இ. பி. திட்டத்தின்கீழ் இதை முழுமையாக ஒழிப்பதற்கு உடனடியாக அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் நோயைப் பொறுத்த வரையில் இதற்கான தடுப்பு நடவடிக்கைகளும் சிகிச்சை முறைகளும் ஒருங்கிணைப்புத் திட்டம், நேஷனல் பைலேரியா கன்ட்ரோல்புரோக்கிராம் மத்திய அரசாங்கத்தினுடைய ஒரு பணியாக தமிழக அரசு ஏற்றுக்கோண்டு, அதைச் செய்து கொண்டு வருகிறது. இதிலே 15 பைலேரியா கன்ட்ரோல் யூனிட்டுகளும் 13 பைலேரியா கிளினிக்குகளும் செங்கற்பட்டு, வேலூர், சிதம்பரம், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் ஆக இப்படி 15 யூனிட்டுகள்—நேரமில்லாத காரணத்தால் அவைகள் அனைத்தையும் படிக்கவில்லை. அதேமாதிரியாக 13 கிளினிக்குகள் திருநெல்வேலி, காஞ்சிபுரம், வேலூர், சிதம்பரம் இப்படி இந்த இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

A population of 58·52 lakhs is being covered by the above scheme. One Filaria Survey Unit which was functioning in Tirunelveli has been transferred to Coimbatore with effect from 1-1-1981 on completion of work

இப்படி பல்வேறு வகைகளில், இந்த ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அந்த நேஷனல் பைலேரியா ஸ்கீம் பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நம்முடைய உள்ளாட்சித் துறையிலே ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் மூலமாக மூன்றில் ஒரு பங்கை நாம் கொடுத்து, அவர்கள் இரண்டு பங்கை எடுத்துக்கொண்டு செயல்படுத்தி வருகிறார்கள்.

1981 மார்ச் 3]

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் ஒழிப்புத் திட்டம் என்றாலே கொசு ஒழிப்புத் திட்டம்தான். மலேரியா, யானைக் கால், கொசுக்களின் மூலமாகத்தான் பரவுகின்றது. பைலேரியா கிளினிக்குகளைத் திறப்பதைவிட, இந்தக் கொசுக்களை ஒழிப்ப தற்கு நல்வாழ்வுத் துறையும் அமைச்சரும், உள்ளாட்சித் துறை யும் தக்க நடவடிக்கை எடுக்குமா? காரணம் ஏராளமான கொசுக்கள் சைதாப்பேட்டையிலும், மாம்பலத்திலும் ஆளையே தூக்கிக்கொண்டு போகிற அளவிற்கு வளர்ந்திருக்கின்றன.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் கேட்ட கேள்விக்குத்தான் நான் பதில் அளித்தேன். மற்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது அல்ல அதன் தாத் பர்யம்.

The Control measures adopted under this scheme are as follows ;

(1) Spraying of mosquito oil to kill mosquite in the larve stage itself.

(2) Examination of blood of those who are affected.

(3) Supply of medicines to those affected.

(4) To Conduct survey and find out mosquito density in the endemic areas.

இவைகளையெல்லாம் நாம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவின் முற்பகுதிக்கு பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே சொன்னமாதிரி இது குறைந்து இருக்கிறது. 1973-ல் 8.38 சதவீதமாக இருந்து, 1974-ல் 9.5 சதவீதமாக இருந்தது, இப்போது 5.3 சதவீதமாக உள்ளது. சென்னை நகரை ஒட்டு மொத்தமாக எடுத்து பார்ப்போமேயானால், இந்த பைலேரியல் சர்வே செய்கிறபோது, சைதப்பேட்டை பகுதியிலே — இது தான் மூலக் கேள்வி, முதல் கேள்வி— நம்முடைய உறுப் பினர் மாண்புமிகு திரு. புருஷோத்தமன் அவர்களுடைய கேள்வி. இங்கே மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விதத்தில் ஸ்டேட்டிஸ்ட் டிக்ஸ் மிகவும் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் திரு. புருஷோத்தமன், திரு. சௌரிராஜன் அவர்கள் இருந்துவரும் சைதாப்பேட்டை, மாம்பலம் பகுதியிலே யானைக்கால் நோய் மிக அதிகமாக இருக்கிறதாகச் சொன்னார்கள். அது இங்கும் பரவி நாங்கள் யாரும் பாதிக்கப்படாதவாறு, எங்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசுகையில் சைதாப்பேட்டையிலே இந்த நோய் மிகவும் அதிகமாக இருக்கிறதென்ற கருத்தைச் சொன்னார்கள். அது தவறானது ஆகும். சைதாப்பேட்டை என்றாலே பைலேரியா ஏரியா என்று ஒரு காலத்தில் ஒரு கருத்து இருந்தது. இப்போது அவ்வாறு இல்லை. இதை திட்டவட்டமாக என்னால் கூறமுடியும்.

In 1973 the microfilaria rate for the entire Madras City was 8·49. I has come down to 5/. In so for as Saidapet area is honcerned the Microfilaria rate which was 8·4 in 1973 and 9·5 in 1974 has come down to 5·3 in 1980. This is lesser than the Microfilarial rate for the whole Madras City. This shows clearly tcat there is a decline in the Micro flarial rate in the City as a whole and especially in Saidapet area.

முன்பு ஒரு தவறான கருத்து. அதனால் சைதாப்பேட்டைபோய் குடியிருப்பது என்றாலே மிகவும் பயப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு என்பதைப் பற்றியது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் இந்த பைலேரியல் சர்வேக்கு எந்தவிதமான தேவையும் இல்லை. பைலேரியா, இது கொஞ்சம் சங்கடமானது. காய்ச்சல் வந்த நேரத்தில் எப்போது இரத்தத்தை எடுத்துப் பார்த்தாலும் தகவல் நமக்குக் கிடைக்காது. ‘‘நைட் பிளட்’’ இரவு 11 மணிக்கு மேல் இரத்தத்தை எடுத்து பார்த்தோமேயானால் இந்த மைக்ரோ பைலேரியா கிருமிகளை மைக்ரோஸ்கோப் மூலமாகப் பார்க்கலாம்.

திரு ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைக்கால் நோய் வருவதற்கு காரணம் கொசுக்கள் என்று அறிகிறோம். சைதாப்பேட்டை, மாம்பலம் பகுதிகளிலேயிருந்து இப்போது என்னுடைய ஏரியாவிற்கும் வந்துவிட்டது. என்ன

1981 மார்ச் 3]

காரணம் என்று சொன்னால் முந்தைய ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் இதற்கு அதிகமான ஸ்டாஃப் போட்டிருந்தார்கள். இப்போது என். எம். இ. பி. என்பது பெயருக்குத்தான் இருக்கிறது. அதில் போதிய ஆட்களும் இல்லை, மருந்துகளும் இல்லை. ஆகவே, இவை போன்றவைகளைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆகவே, அதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதன் மூலமாக கொசுக்களை ஒழித்து யானைக்கால் வியாதி வராமல் தடுப்பதற்கு எங்கள் கலைஞர் ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளைப்போன்று எடுக்கப்படுமா?

டாக்டர் எச். வி. ஹண்டே: அவரவர்கள் தங்கள் தங்கள் ஆட்சிக் காலத்திலே செய்ததைச் சொல்லி பெருமை தேடிக் கொள்வது இயற்கை. அதிலே நான் ஒன்றும் சொல்லவில்லை. இதிலே நாம் உணர்ச்சி வசப்பட்டு பேசவேண்டியதில்லை. அந்த அந்தக் கட்சிக்காரர்கள் தங்களுடைய காலம்தான் பொற்காலம் என்று சொல்வது இயற்கை. இந்தத் தரப்பிலே இருக்கின்றவர்கள் எங்கள் காலம்தான் பொற்காலம் என்று சொல்வதும் அதைக் போன்று திரு. பொன்னுரங்கம் அவர்கள் தங்களுடைய ஆட்சிக் காலம்தான் பொற்காலம் என்று சொல்வதும் இயற்கை. இந்த விஷயத்திலே நான் குறுக்கிட விரும்பவில்லை. நல்ல வகையிலே அதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்கிறபோது நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் காலமாக இருந்தாலும், அந்தக் காலமாக இருந்தாலும்— அந்தக் காலத்திலே நான்கூட வினா எழுப்பியவன்தான்— எந்தக் காலமாக இருந்தாலும் நாமெல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டியது ஜாஸ்தியாக இருக்கிறது. கொசு ஒழிப்பு என்றால், மலேரியா, பைலேரியா என்று இருப்பது 10 சதவீதம்தான், மீதம் உள்ள 90 சதவீதம் சாதாரணக் கொசுக்கள் நியூசென்ஸ் கொசுக்கள் என்று சொல்லப்படுபவை. கியூலெக்ஸ் அண்ட் ஹார்ம்லெஸ் என்று சொல்லப்படுகிறது. கொசு ஒழிப்பிலே சிறந்த முறையிலே செய்து இருக்கிறோம் என்று நாமே நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. முழுமையான வெற்றி கண்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. அப்போதும் முழுமையான வெற்றி பெறவில்லை, இப்போதும் பெறவில்லை. அந்த வகையிலே நாம் இப்போது ஒன்றாகச் சேர்ந்து நல்ல வகையிலே நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, யானைக் கால் என்று இந்த வியாதியைக் குறிப்பிடுகிற காரணத்தினாலே பொதுமக்கள் தங்களுடைய கால் வீங்கினால் பைலேரியா என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நம்புகிறேன். பைலேரியா என்பது காலிலே வருகிற வீக்கம் மாத்திரமல்ல, கையிலோ உட

லின் வேறு பாகத்திலேகூட அத்தகைய வீக்கங்கள் வருவதுண்டு. காய்ச்சல் வராமலே கூட அத்தகைய வீக்கங்கள் வருவதுண்டு. எனவே, யானைக்கால் கால்வீங்கினால்தான் வரும், உடலிலே வேறு எந்தப் பகுதியிலேயும் வரும் எனவே, அதற்கு முன் ஜாக்கிரதையாக மருத்துவ வசதிகளை செய்துகொள்ளவேண்டுமென்று அரசு அத்தகைய பிரச்சாரத்தைச் செய்யுமா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்து உண்மை பைலேரியா காலுக்கு மட்டுமல்ல, கைக்கும் வரும். லிம்பெடிக் சர்குலேஷன், இரத்தம் அப்ஸ்டரக்ஷன் எங்கெங்கு வருகிறதோ அங்கே உடனடியாக வீக்கம் வரலாம். சாதாரணமாக ஸ்போர்ட்டல் பைலேரியா இருக்கிறது, அப்பர் லிம்ஸில் வருவது இருக்கிறது கீழே காலுக்கும் வரக்கூடியது இருக்கிறது. எந்த இடத்திலே வந்தாலும் உடனடியாக கவனிக்க வேண்டும். ஆனால், அதிலே என்ன சங்கடம் என்றால் பைலேரியா வராமல் தடுப்பதற்காக ஹெட்ரஸான் இருப்பதைப்போல டயகார்பஸான், டி.இ.சி. என்ற மாத்திரை இருக்கிறது. டி.இ.சி. என்ற மாத்திரையைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வந்தால் அதனால் அனாவசியமாக தீமைகள் வரும். வியாதி வரும் என்று கருதி, வராமல் இருக்கவேண்டுமென்பதற்காக தொடர்ந்து அதைக் கொடுத்தால் தீமை வரும். டபிள்யூ.எச்.எஸ். தொடர்ந்து அதைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறது, அரசாங்கத்தினுடைய கருத்தும் அதுதான். கொசு ஒழிப்பிலே நாம் எவ்வளவுக்கெவ்வளவு வெற்றிபெறுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பைலேரியாவை ஒழிப்பதில் வெற்றி பெறுகிறோம் என்பது அர்த்தம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சென்னை மாநகரத்திலே சீனியர் என்டோமாலஜிஸ்ட்ஸ் என்கின்ற எக்ஸ்பர்ட்ஸ்கள் அரசாங்கத்தினுடைய டி.எச்.எஸ். அலுவலகத்திலிருந்து கார்ப்பரேஷனுக்கு அனுப்பி, பைலேரியா, மலேரியா போன்ற வியாதிகளை கட்டுப்படுத்திவந்தார்கள்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி : ஆனால், கடந்த மூன்றாண்டுகளாகக் கார்ப்பரேஷனிலே இருந்த, ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை அரசாங்கத்திற்கு அனுப்பிவிட்ட காரணத்தால் போதுமான திறமை உள்ளவர்கள் கார்ப்பரேஷனிலே இல்லாத காரணத்தால் சென்னை மாநகராட்சியில் பொதுவாக மலேரியா அதைப்போல பைலேரியா அதிகமாகி இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? அது சம்பந்தமான புள்ளி

1981 மார்ச் 3]

விவரங்கள் பல தடவைகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். இப்படி ஏன் திறமையுள்ளவர்களை ஹெல்த் சர்வீஸிலேயிருந்து கார்ப்பரேஷன் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்க வேண்டும். எனவே, அதற்கான முயற்சியிலே இந்த அமைச்சரவர்கள் ஈடுபடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பைலேரியா டிஸீஸைப் பொறுத்தவரையிலே ஒட்டு மொத்தமாக இந்த ஆண்டு, சென்ற ஆண்டைவிட குறைந்திருக்கிறது. புடிப்படியாக கடந்த மூன்றாண்டுகளின் புள்ளி விவரத்தை எடுத்துக் காட்டி பைலேரியா டிசீஸ் நிச்சயமாகக் குறைந்திருக்கிறது என்பதைத் தெளிவாக, சொல்லியிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுப்பிய கேள்வி எண்டோமாலோஜிஸ்ட்டைப் பொறுத்தவரையிலே, நான் குறிப்பு வைத்திருக்கிறேன்.

Whenever a report from the lccal bcdy or a complaint is received about the prevalence of filarisis in a particular area, a survey is conducted by the Entomolcgist of the Public Health Department and on the basis of his recommendation a scheme, mosqu to antifilaria is prepared and forwa ded to the lccal body including Corporation. If the lccal body agrees to bear 2/3rd of the expenditure, government accords sanction for implementation of the scheme by the local body the by paying 1/3rd grant.

ஆகவே, சீனியர் எண்டோமாலோஜிஸ்ட் இருக்கிறார் ; அவர் பணியாற்றிக்கொண்டு வருகிறார். அவர் எந்தெந்த நேரத்தில் லோகல் பாடிஸுக்குத் தேவை என்று கருதப்படுகிறதோ அந்த நேரத்திலே அவருடைய சர்வீசஸ் லோன் செய்யப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU V. KRISHNAMOORTHI : My question is not fully answered.

MR. SPEAKER : I won't allow this. Mr. V. V. Swaminathan please.

திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவரவர்களே, கொசுத் தடுப்பு, கொசு ஒழிப்பு என்ற முறையில் பார்த்தால் ஸ்டாப் மீது குற்றம் சொல்ல முடியாது. லார்வே மனிதனைக் கடிப்பதில்லை ; கொசுக்கள்தான் மனிதனைக் கடித்து நோய்கள் பரவுகின்றன. லார்வேயை அழிப்போம் என்று சொல்லி

கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டு இருக்கிறது. மத்திய சர்க்காரானாலும், மாநில சர்க்காரானாலும் அடல்ட் மஸ்கொட்டோஸ் பறந்து வந்து கடிக்கின்ற காரணத்தால் கொசுக்களைக் கொல்வதற்கு வீரியமுள்ள மருந்துகளைக் கண்டு பிடிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய சர்க்காருக்கு அல்லது மருத்துவ இலாக்காவிற்கு சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே என்ன பிரச்னை என்றால் அடல்ட் மஸ்கொட்டோஸைப் பொறுத்தவரையில் தெர்மோ ப்ளாகிங் செய்து கொண்டிருக்கிறோம். அடல்ட் மஸ்கொட் டோஸை ஒழிக்க நாம் தெளிக்கக்கூடிய மருந்து படிப்படியாக அந்த மஸ்கொட்டோஸுக்கு ரெசிஸ்டென்ஸ் வருகிறது. மாண்பு மிகு உறுப்பினர் திரு. வி. வி. எஸ். கேட்ட கேள்வி, படிப்படியாக மஸ்கொட்டோஸுக்கு வருகின்ற காரணத்தால் நாம் தருகின்ற, percentage of examination அதை ஜாஸ்தியாகப் போட வேண்டியிருக்கிறது. அப்படிப் போடும் நேரத்தில், மஸ்கொட் டோஸை ஒழிக்கும் நேரத்தில் நமக்கும், நம்முடைய மனிதர்கள் மேலேயும் lethal action poisonous effect வரக்கூடிய நிலைமை யிருக்கிறது. ஆகவே, மனிதர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் poisonous effect அதாவது lothal effect என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள், அது இல்லாமல், அதே நேரத்திலே மஸ்கொட் டோஸை ஒழிக்கக்கூடிய optimum percentage of the drug அதிலே போட்டுத்தான் தெளிக்க வேண்டியிருக்கிறது. அதை ஒருபுறத்திலே நாம் செய்துகொண்டிருக்கக்கூடிய நேரத்திலே நாம் முனைப்போடு கவனிக்க வேண்டியதை destruction of larvae —லார்வேயை வெகு சுலபமாக ஒழிக்க முடியும். அப்படிச் செய்தால் அதற்குப் பிறகு மஸ்கொட்டோஸ் வருவதற்கு இல்லா மல் போய்விடும். ஆகவே, லார்வேயை ஒழிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். மஸ்கொட்டோஸை ஒழிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஆனால் இதில் இருக்கக்கூடிய சங் கடங்களை நான் சொல்லியிருக்கிறேன். அந்தச் சங்கடங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் ஓமியோபதி பிரிவு.

*வினா எண். 350—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனையில் புதியதாக ஓமியோபதி பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?